## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 106/2017 | Date : 20.01.2023. | PW1 |
|---|---|---|
| Name: மருத்துவர்.ரேவதி | த/பெ. **மகேந்திரன்** | |
| Evidence Recorded Time: 04.16 P.M. to 04.35 P.M. | | |

**3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

கடந்த 23.03.2017–ம் தேதியில் விபத்து நடந்ததாக சொல்லப்படும் TN 52 U 7797 என்ற பதிவெண் கொண்ட விபத்தில் சம்மந்தப்பட்ட ஹோண்டா அமேஸ் கார் என் பெரியம்மா பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காரில் நான், என் பெரியம்மா, என் பெரியப்பா ஆகியோர் பயணம் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி காரை என் என் அப்பாவின் மைத்துனர் மாரியப்பன் மகன் ஜெயக்குமார் என்பவர் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். விபத்து அதிகாலை 3 மணிக்கு நடைபெற்றது. விபத்து மேட்டூர் பவானி சாலை குட்டைமுனியப்பன்கோவில் அருகே நடைபெற்றது என்றால் சரிதான். விபத்து நடைபெற்ற போது ராமேஷ்வரம் சென்றுவிட்டு மேட்டூர் வழியாக கொளத்தூர் வந்து கொண்டிருந்தோம். TN 27 Z 7787 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலேண்ட் லாரியை கிருஷ்ணன் மகன் கோவிந்தராஜ் என்பவர் ஓட்டிவந்தார் என்றால் சரிதான். நான் மருத்துவம் படித்து முடித்து தற்போது மருத்துவத்தில் முதுகலை படிப்பினை மதுரையில் படித்துவருகிறேன். முதல் தகவல் அறிக்கையான ம.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள வாசகங்கள் அனைத்தும் உண்மைதான். இந்த விபத்திற்கு காரணம் மேற்படி காரை ஓட்டிய என் அப்பாவின் மைத்துணர் ஜெயக்குமார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை எண்.169/2017 ன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையின் அடிப்படையில் என் அப்பாவின் மைத்துனர் ஜெயக்குமார் குற்றவியல் நீதிமன்ற எண்.1, பவானியில் அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் அதுபற்றி விவரம் எனக்கு தெரியாது. நான் தவறுதலாக சொல்கிறேன் என்றாலும் அவர் மேற்படி நீதிமன்றத்தில் அபராத தொகை செலுத்தியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு மேற்படி சங்கதிகள் தெரியும் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கைக்கு புகாரினை கொடுத்தவர் TN 27 Z 7787 என்ற லாரி ஓட்டிவந்த டிரைவர் என்றால் சரிதான். அதிகாலை 3.30 மணிக்கு நாங்கள் வந்த ஹோண்டா அமேஸ் காரினை ஓட்டி வந்த ஓட்டுநர் தூக்க கலகத்தில் லாரியின் மீது பின் பக்க வலது பக்க டையரின் மீது மோதி இந்த விபத்தினை ஏற்படுத்தினார் என்றால் சரிதான். காரில் பயணம் செய்த எங்கள் மூவரையும் மேற்படி லாரியின் ஓட்டுநர் தான் ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த சாட்சி பிரமாண பத்திரத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். மேற்படி பிரமாண பத்திரத்தில் நான் மிகவும் ஏழ்மை நிலையில் இருப்பதாக

தெரிவித்திருப்பது தவறு என்றால் கஷ்டப்படுகிறேன், ஆனால் வறுமை கோட்டிற்கு கீழ் இல்லை. விபத்தின் மூலம் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சைக்காக கோவை மெடிக்கல் செண்டர் மருத்துவமனையில் 23.03.2017–ம் தேதியில் அனுமதிக்கப்பட்டு 27.03.2017 ம் தேதி வரை மேற்படி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவந்தேன் என்றால் சரிதான். மேற்படி சிகிச்சை கால கட்டத்தில் மருத்துவ செலவுகள் எவ்வளவு ஏற்பட்டது என்றால் மருத்துவ பில்கள் (ம.சா.ஆ–13) ரூ.75,071/– செலவானது. ம.சா.ஆ.13 ஜெராக்ஸ் நகல்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசல் பில்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் மருத்துவ தொகைகள் அனைத்தும் பெற்றுவிட்ட காரணத்தினால்தான் நான் அசல் மருத்துவ பில்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஜெராக்ஸ் நகல் மருத்துவ பில்களை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த மருத்துவ பில்களில் மொத்தமாக தான் செலவு தொகை குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய மருத்துவ பில்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.3 காயச்சான்றில் எனக்கு ஒரே ஒரு கொடுங்காயமும் ஒரு சாதாரண காயமும் தான் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு முழு காரணம் காரின் ஓட்டுநர் தான் என்பதாலும் TN 27 Z 7787 பதிவெண் கொண்ட லாரியின் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்ற காரணத்தினாலும் 3–ம் எதிர்மனுதாரிடம் நான் எந்த விதமான நஷ்டஈடும் கோர முடியாது என்றாலும் சரியல்ல. அதே போல 3–ம் எதிர்மனுதாரர் பதிலுரை தாக்கல் செய்த பிறகுதான் எங்களது TN 52 U 7797 பதிவெண்ட கொண்ட வாகனத்தையும், எங்கள் வாகன காப்பீட்டு நிறுவனத்தையும் தரப்பினர்களாக சேர்தோம் என்றால் சரிதான். நான், எனது பெரியம்மா MCOP.108/2017, என் பெரியப்பா MCOP.107/2017 என்று மனுக்களை நஷ்டஈடு கோரி தனிதனியாக சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள MCOP.106/2017 மனுவிலும், என் பெரியப்பா தாக்கல் செய்த MCOP.107/2017 மனுவிலும் எனது பெரியம்மா அன்னகொடி காரின் உரிமையாளர் என நான்காம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் பெரியம்மா தாக்கல் செய்த MCOP.108/2017 மனுவில் என் பெரியம்மாவை காரின் உரிமையாளர் என்ற முறையில் எதிர்மனுதாரராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு எந்தவிதமான வருமான இழப்பும் இல்லை என்றால் சரிதான். விபத்தின்போது நான் மாணவிதான். எனக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை என்றாலும் சரிதான். அதனால் 3–ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் நஷ்டஈட்டை 4, 5 எதிர்மனுதாரர்கள்தான் தர கடமைப்பட்டவர்கள் என்றாலும் சரியல்ல. நான் தற்போது மாணவி என்றால் சரிதான்.

**<u>5–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

விபத்து சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், பிரமாண பத்திரத்திலும் விபத்து யாரால், எப்படி ஏற்பட்டது என்று கூறியுள்ள சங்கதிகள் உண்மைதான். என்னுடைய மனுவிலேயே பக்கம் 7 பாரா 23 D, E ஆகியவற்றில் விபத்தானது லாரி டிரைவரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டதாக கூறியுள்ளேன். அதனால்தான் மனுதாக்கல் செய்யும் போது லாரி ஓட்டுநர், உரிமையாளர், லாரியின் காப்பீட்டு நிறுவனம் ஆகிய மூவரையும் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு 27.09.2019–ல் எங்கள் காரின் உரிமையாளரையும், காப்பீட்டு நிறுவனத்தையும் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். லாரியின் ஓட்டுநரை தரப்பினராக சேர்த்தது போல் காரின் ஓட்டுநர் ஜெயக்குமார் என்பவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கார் ஓட்டுநரை தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை லாரி ஓட்டுநர் கோவிந்தராஜால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை லாரியின் ஓட்டுநர் நிலையம் ஆஜராகி முதல் தகவல் அறிக்கையை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கார் ஓட்டுநர் நிதானமாக சென்றார் என்றாலும் லாரி ஓட்டுநர் தான் வேகமாக வந்து இந்த விபத்து நடந்தது என்றாலும் சரிதான். டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் மருத்துவபில்களின் அசல்களை தாக்கல் செய்யாததால் அதில் உள்ள தொகைகளை நான் கோரமுடியாது என்றால் சரியல்ல. அசல் மருத்துவ பில்கள் தொலைந்துவிட்டது. நான் தாக்கல் செய்த ஜெராக்ஸ் மருத்துவபில்களை வைத்து ஒன்றும் செய்யமுடியாது என்றால் சரிதான். விபத்து 23.03.2017–ம் தேதி நடைபெற்றது என்றால் சரிதான். நான் தற்போதும் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். லாரியின் ஓட்டுநரால்தான் விபத்து ஏற்பட்டது என்பதால் லாரியின் இன்சூரன்ஸ் நிறுவனம் தான் இழப்பீடு தர கடமைப்பட்டது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை –</u> இல்லை.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.